உ

சிவமயம்.

அறப்பளீசுரசதகம்.

சதுரகிரி

அம்பலவாணக்கவிராயர்

பாடியது.

இஃது.

திருத்தணிகை.

ஆறுமுகசுவாமிகளால்

பரிசோதித்து.

பிரிங்கிமாநகரம்

சாமிமுதலியார்-குமாரர்

வேம்புலிமுதலியாரது

வேதாந்தசமரசவிளக்க-அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விஷு ௵ ஆனி ௴

ROJA MUTHIAH
KOTTAIYUR—623 106

உ

விளம்பரம்.

—(*)—

இதனால் யாவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில், சென்னை, சூளை, அவதானம் பாப்பையர் வீதியில் (௮௮) வது கதவிலக்கமுள்ள வீட்டில், பிரிங்கிமாநகரம் சாமிமுதலியார் குமாரர் வேம்புலிமுதலியா ரவர்களால் ஸ்தாபித்திருக்கும், வேதாந்தசமரசவிளக்க அச்சுக்கூடத்தில், பெரியபுராணம் மூலம், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரத்திருமுறை மூன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப்பதிகத் திருமுறையும், அகத்தியமகாமுனிவர் தேவாரத்திரட்டும் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகமும், ஒன்பதுநாயன்மாரருளிச்செய்த திருவிசைப்பாவும், இன்னும் பலவிதமான தமிழ் புஸ்தகங்கள் விற்பனைசெய்துக்கொண்டு வருவதால் வேண்டுபவர்கள் விலைசரசமாய் பெற்றுக்கொள்ளலாம்.

கடவுள்துணை.

அறப்பளீசுரசதகம்.

காப்பு-வெண்பா.

உம்பர்கோனெம்பெருமா னேங்காப்பளீசுரன்மேற்
பைம்பொருள்சேருஞ்சதகம்பாடவே-யம்புவியோர்
ஆக்குந்துதிக்கையுளானன்புடையார்க்கின்பருளிக்
காக்குந்துதிக்கையுளான் காப்பு.

உயிர்சிறப்பு.

கடலுலகில்வாழுமுயிரெழுபிறப்பினுண்மிக்க காட்சிபெறுநரசன்மமாய்க், கருதப்பிறத்தலரி ததினிமுயர்ச்சாதியிற் கற்புவழிவருதலரிது, வடிவமுடனவயவங்குறையாதுபிழையாது வருதலது தனினுமரிது, வந்தாலுமிதுபுண்ய மிதுபாவமென்றெண்ணி மாசில்வழிநிற்றலரிது, நெடியதனவானாத லரிததினிரக்கமுள நெஞ்சினோனாதலரிது நேசமுடனுன்பதத்தன்பனாய்வருதலின் நீணிலத்ததினுமரிதாம், அடியவர்க்கமுதமே மேழைபூபதிபெற்ற வதிபனெமதருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (க)

மனையாட்சிறப்பு.

கணவனுக்கினியளாய் மிர்துபாஷியாய்மிக்க கமலைநிகரூபவதியாய்க், காய்சினமிலாளுமாய் நோய்பழியிலாததோர் கால்வழியில்வந்தவளுமாய், மணமிக்கநாணமட மச்சம்பயிர்ப்பென்ன வருமினியமார்க்கவதியாய், மாமிமாமர்க்கிதஞ்செய்பவளுமாய்வாசல் வருவிருந்தோம்புபவளாய், இணையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாய்வந்தியென்பெயரிலாதவளுமாய், இரதியெனவேலீலை புரிபவளுமாய்ப்பிறர்தமில்வழிசெலாதவளுமாய், அணியிழையொருத்தி யுண்டாயினவள்கற்புடையளாகுமெமதருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (உ)

நன்மக்கட்பேறு.

தன்குலம்விளங்கிடப் பெரியோர்கள்செய்துவரு தருமங்கள்செ

ய்துவரலும், தன்மைமிகுதானங்கள்செய்தலுங்கனயோக சாதகனெனப்படுதலும், மங்குதலிலாததன்றந்தைதாய் குருமொழிமறாதுவழிபாடுசெயலும், வழிவழிவருந்தமதுதேவதாபத்திபுரி மார்க்கமுந்தீர்க்காயுளும், இங்கிதகுணங்களும் வித்தையும்புத்திய மீகையுஞ்சன்மார்க்கமும், இவையெலாமுடையவன் புதல்வனுமவனையே யீன்றவன்புண்ணியவானும், அங்கசவிரோதியே சோதியேநீதியே ரரசனெமதருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௩)

சகோதரரொருமை.

கூடப்பிறந்தவர்க் கெய்துதுயர்தமதுதுயர் கொள்சுகந் தஞ்சுகமெனக், கொண்டுதாந்தேடுபொருளவர்தேடுபொருளவர்கொள் கோதில்புகழ்தம்புகழெனத், தேடுற்றவவர்நிந்தை தன்னிந்தைதந்தவந்திலவந்தவமாமெனச், சீவனொன்றுடல்வேறிவர்க்கென்ன வைந்தலைச்சீரரவமணிவாய்தொறும், கூடுற்றவினையெடுத்தோருடனிறைத்திடுங்கொள்கைபோற்பிரிவின்றியே, கூடிவாழ்பவர்தம்மை யேசகோதரரெனக்கூறுவதுவேதருமமாம், ஆடிச்சிவந்த செந்தாமரைப்பா தனேயண்ணலெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪)

சற்குருவியல்பு.

வேதாந்தசித்தாந்தவழிதெரிந்தாசாரவிவரவிஞ்ஞானபூர்ண வித்தியாவிசேஷ சற்குணசத்தியசம்பன்ன வீரவைராக்யமுக்ய, சாதாரணப்பிரியயோகமார்க்காதிக்ய சமாதிநிஷ்டானுபவராய்ச், சட்சமயநிலைமையும் பரமந்திரபாதந்திர தரமமும்பரசமயமும், நீதியினுணர்ந்துதத்துவமார்க்கராய்ப்பிரமநிலைகண்டுபாசமிலராய், நித்தியானந்தசைதன்யராயாசையறுநெறியுளோர் சங்குரவராம், ஆதாரமாயுயிர்க்குயிராகி யெவையுமா மமலவெமதருமைமதவேள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫)

நன்மாணாக்கரியல்பு.

வைதாலுமோர்கொடுமை செய்தாலுமோசீறிமாறுதிகழ்ந்தாலுமோ, மனதுசற்றுகிலுங் கோணாதுநாணாது மாதாபிதாவெனக்குப் பொய்யாமனீயென்று கனிவொடும்பணிவிடை புரிந்தபொருளுடலாவியும், புனிதவுன்றனதெனத்தத்தஞ்செய்திரவுபகல் போற்றிமலரடியில்வீழ்ந்து, மெய்யாகவேபரவி யுபதேசமதுபெற விரும்புவோர்சற்சீடராம், வினைவேரறும்படியவர்க்கருள்செய் திடுவதேமிக்கதேசிகரதுகடன், ஐயாபுரம்பொடிபடச்செய்த செம்மலேயண்ணலெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே (௬)

பொருள்செயல்வகை.

புண்ணியவசத்தினால்செல்வமது வரவேண்டும் பொருளைரட்சிக்கவேண்டும், புத்தியுடனதுவொன்று நானாகவேசெய்துபோதவும்வளர்க்கவேண்டும், உண்ணவேண்டும் பின்பு நல்லவஸ்திராபரணமுடலிற்றரிக்கவேண்டும், உற்றபெரியோர்க்கவிஞர் தமராதுலர்க்குதவியோங்குபுகழ்தேடவேண்டும், மண்ணில்வெகுதருமங்கள் செயவேண்டுமுயர்மோட்ச வழிதேடவேண்டுமன்றி, வறிதிற்புதைத்துவைத்தியாதபேர்களே மார்க்கமறியாக்குருடராம்- அண்ணலேகங்காகுலத்தலைவன்மோழைதருமழகனெம தருமைமதவேள்- அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப் பளீசுரதேவனே. (ஏ)

தீவழிவிலக்கு

வஞ்சகர்தமைக்கூடி மருவொணாதன்பிலார் வாசலிற்செல்லொணாது, வாதெவரிடத்திலும் புரியொணாதறிவிலா மடையர்முன்னிற்கொணாது, கொஞ்சமேனுந்தீதுசெய்யொணாதொருவர்மேற் குற்றஞ்சொல்லொண்ணாதயம், கோதையர்களோடு பரிகாசஞ் செய்யொண்ணாது கோளுரைகள்பேசொணாது, நஞ்சுதருபாம்பொடு பழகொணாதிருளவழிநடந்துதனியேகொணாது, நதிபெருக்காகினதினீந்தல்செய்யொண்ணாதுநல்வழிமறக்கொணாது, அஞ்சாமலரசர்முன்பேசொணாதிவையெலாமறியுமெமதருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அ)

ஒன்றற்கொன்றழகுசெய்வன.

வாழ்மனைதனக்கழகுகுலமங்கைகுலமங்கை வாழ்வினுக்கழகுசிறுவர், வளர்சிறுவருக்கழகு கல்விகல்விக்கழகுமாநிலந் துதிசெய்குணமாம், சூழ்குணமதற்கழகுபேரறிவுபேரறிவு தோன்றிடிலதற்கழகுதான், தூயதவமேன்மையுபகாரவிரதம்பொருமை சொல்லரியபெரியோர்களைத், தாழ்தல்பணிவிடைபுரிதல்சீலனே சங்கநூலைசாற்றுமிவையாமென்பர்காண், சௌரிமலரோனமரர் முனிவர்முச்சுடரெலாஞ்சரணமெனரட்சியெனவே ஆழ்கடலூதித்துவரு விடமுண்டகண்டனேயண்ணலெமதருமைமதவேள்-அனுதினமுமனதினினை (கூ)

ஒன்றில்லாமையாற்பயன்படாதவை.

கோவிலில்லாதவூர்நாசியில்லாமுகங் கொழுநனில்லாதமடவார், குணமதில்லாவித்தைமண மதில்லாதமலர்க்குஞ்சரமிலாதசேனை, காவலில்லாதபயிர்பாலரில்லாதமனைகதிமதியிலாதவானம், கவிஞரில்லாதசபைசுதிலயையிலாதபண்காவலரிலாததேசம், ஈவதில்லாததனநியமமில்லாதசெபமிசை லவணமில்லாதவூண், இச்சையில்லாதபெண்போகமிவைதம்மினேதுபலனுண்டுகண்டாய், ஆவியனையாட்கிடந்தந்தவாகற்பதரு வாகுமெம தருமைமதவேள்-அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (ய)

ஒன்றற்கொன்றுதகாதசேர்க்கை.

பூததயையில்லாதலோபியரிடத்திலே பொருளையருளிச்செய்தனை, புண்ணியஞ்செய்கின்ற சற்சனரிடத்திலே பொல்லாதமிடிவைத்தனை, நீதியகன்மூடர்க்கருந்ததியெனத்தக்க நெறிமாதரைத்தந்தனை, நிதானமுளவுத்தமர்க்கிங்கிதமிலாதகொடு நீலியைச்சேர்வித்தனை, சாதியிலுயர்ந்தபேரினர் பின்னேசென்று தாழ்ந்துபரவச்செய்தனை, தமிழருமையறியாதபுல்லர்மேற்கவிவாணர்தாம்பாடவேசெய்தனை, ஆதரவிலாமலிப்படிசெய்த தென்சொலாயமலவெம தருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே-(௰௧)

குணக்கேடரியல்பு.

மாறுதகலைகற்றுநிலைபெற்றசபையிலே வாயிலாதவனொருபதர் வாள்பிடித்தெதிரிவரினோடிப்பதுங்கிடு மனக்கோழைதானொருபதர், வருவழக்குறைத்தனைவருஞ்சீசீயென்றிகழநிற்பானொருபதர் இல்லாள்புறஞ செலச்சம்மதித்தவளோடிணங்கிவாழ்பவ னொருபதர், வேறொருவர்மெச்சாதுதன்னையேதான்மெச்சி வீண்பேசுவானொருபதர், வேசையர்களாசைகொண் டுள்ளளவுமனையாளை விட்டுவிடுவானொருபதர், ஆறுததுயரையும்மிடியையுந்தீர்த்தருள்செயமலவெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதே

செய்யத்தக்கவை.

வாலிபந்தனில்வித்தை கற்கவேண்டுங் கற்றவழியிலே நிற்கவேண்டும், வளைகடறிரிந்துபொருடேடவேண்டுந்தேடி வளரறஞ்செய்யவேண்டும், சீலமுடையோர்களைச்சேரவேண்டும்பிரிதல்செய்யாதிருக்கவேண்டும், செந்தமிழ்ப்பாடல்பலகொள்ளவேண்டுங்கொண்டு தியாகங்கொடுக்கவேண்டும், ஞாலமிசைபலதருமநாட்டவேண்டும்நாட்டிநன்றாய்நடத்தவேண்டும், நம்பனிணையடிபூசை பண்ணவேண்டும்பண்ணினுலுமிகுபத்திவேண்டும், ஆலமமர்கண்டனே பூதியணிமுண்டனேயனகவெமதருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௰௩)

மேன்மேலுயர்ச்சி.

தன்மட்டிலிரவாதுசீவனஞ்செய்பவன்சாமர்த்தியமுளபுருஷனும், சந்ததம்பதின்மரைக்காப்பாற்றுவோன்மிக்க தரணிபுகழ்தருதேவனும், பொன்மட்டில்லாமலீந்தொருநூறுபேரைப் புரப்பவன்பொருவிலிந்த்ரன், புவிமீதிலாயிரம்பேர்தமைக்காப்பாற்றுபுண்யவானேபிரமனும், நன்மைதருபதினாயிரம்பெயர்தமைக்காத்து ரட்சிப்பவன்செங்கண்மால், நாளுமவன்மேலதிகமாக வெகுபேர்க்குதவு நரனேமகாதேவனும், அன்மட்டுவார்குழலி பாகனேயோகனே யண்ணலெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே, (௰௪)

செயற்கருஞ்செயல்.

நீர்மேனடக்கலாமெட்டியுந்தின்னலாம் நெருப்பைநீர்போற்செய்யலாம், கொடியபெருவேங்கையைக் கட்டியேதழுவலா நீளரவினைப் பூணலாம், பார்மீதுமணலைச்சமைக்கலாஞ்சோறெனப்பட்சமுடனே யுண்ணலாம், பாணமொடு குண்டுவிலகச்செய்யலா மரப் பாவைபேசப்பண்ணலாம், ஏர்மேவுகாடியுங்கடையுற்றுவெண்ணெயு மெடுக்கலாம்புத்திசற்று, மில்லாதமூடர்தன்மனத்தைத்திருப்பவே யெவருக்குமுடியாதுகாண், ஆர்மேவுகொன்றைபுனை வேணியாய்சுரர்பரவுமமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௧௫)

உத்தமராவோர்.

செய்நன்றிமறவாதபேர்களு மொருவர்செய்தீமையைமறந்தபேரும், திரவியந்தரவரினு மொருவர்மனையாட்டிமேற் சித்தம்வையாதபேரும், கைகண்டெடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொருளாளர் கையிற்கொடுத்தபேரும், காசினியிலொருவர்செய் தருமங்கெடாதபடிகாத்தருள்செய்கின்றபேரும், பொய்யென்றுநிதிகோடிவரினும்வழக்கழிவுபுகலாதநிலைகொள்பேரும், புவிமீதுதலைபோகுமென்னினுங் களவிலும்பொய்மையுரையாதபேரும், ஐயவிங்கிவரெலாஞ் சற்புருஷரென்றுலகிலகமகிழ்வதருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௧௬)

இதுவுமது.

அடைக்கலமெனத்தேடிவருவோர்தமைக்காக்கு மவனேமகாபுருஷனும், அஞ்சாமலெதுவரினுமெதுபோகினுஞ்சித்த மசைவிலான்மகாதீரனும், தொடுத்தொன்றுசொன்னசொற் றப்பாதுசெய்கின்றதோன்றலேமகாராசனும், தூறிக்கலைக்கின்றபேர் வார்த்தைகேளாததுரையேமகாமேருவாம், அடுக்கின்றபேர்க்குவருமிடர்தீர்த்திரட்சிக்குமவனேமகாதியாகியாம், அவரவர்தராதரமறிந்துமரியாதைசெயுமவனேமகாவுசிதனும், அடர்கின்றமுத்தலைச் சூலனேலோலனேயமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்

ஒன்றிலொன்றில்லாமை.

காமிக்குமுறையில்லைவேசைக்குநாணில்லை கயவர்க்குமேன்மையில்லை, கன்னமிடுகள்வருக்கிருளில்லைவிபசார கன்னியர்க்காணியில்லை, தாமெனுமயக்கறுத்தோங்குபெரியோர்க்குவரு சாதிகுலமென்பதில்லை, தாட்சணியமுடையபேர்க்கிகலில்லை யெங்குமொருசார்பிலார்க்கிடமதில்லை, பூமிக்குளீயாதலோபர்க்குவளமான புகழென்பதொன்றுமில்லை, புலையர்க்குநிசமில்லை கைப்பொருளிலாததோர் புருஷருக்கொன்றுமில்லை, யாமினிதனக்குநிகர்கந்தரத்திறைவனேயன்புடையவருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௧அ)

யாக்கைநிலையாமைமுதலியவை.

காயமொருபுற்பதம் வாழ்வுமிலைசூழ்தருங்காட்டிலாற்றின்பெருக்காம், கருணைதருபுதல்வர்கிளைமனைமனைவியிவையெலாங் கானல்காட்டும்பிரவாகம்மேயபுஜபலவலுமையிளமையழகிவையெலாம்வெயின்மஞ்சளுயிர்தானுமே, வெட்டவெளிதனில்வைத்த தீபமெனவேகருதிவீண்பொழுதுபோக்காமலே, நேயமுடனேதெளிந்தன்பொடுநின்பாதத்தினினைவுவைத்திருபோதிலும், நீர்கொண்டுமலர்கொண்டுபரிவுகொண்டர்ச்சிக்க நிமலனேயருள்புரிகுவாய், ஆயுமறிவாளர் பணிபாதனேபோதனே யண்ணலெமதருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௰௯)

திருமங்கையிருப்பிடம்.

நற்பரிமுகத்திலேமன்னவரிடத்திலே நாகரிகமாமனையிலே - நளினமலர்தன்னிலே கூவிளந்தருவிலே நறைகொண்ட பைந்துளவிலே, கற்புடையர்வடிவிலே கடலிலேகொடியிலே கல்யாணவாயிற்றனிலே, கடிநகரிடத்திலேநற்செந்நெல்விளைவிலே கதிர்பெறுவிளக்கதனிலே, பொற்புடையசங்கிலே மிக்கோர்கள்வாக்கிலே பொய்யாத பேர்பாலிலே, பூந்தடந்தன்னிலே பாற்குடத்திடையிலே போதகத்தின்சிரசிலே, அற்பெருங்கோதைமலர் மங்கைவாழிடமென்ப ரண்ணலெமதருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௨௰)

மூதேவியிருப்பிடம்.

மிதமின்றியன்னம்புசிப்போரிடத்திலும் மிகுபாஷையோரிடத்தும், மெய்யொன்றிலாமலேபொய்பேசியேதிரியு மிக்கபாதகரிடத்தும், கதியொன்றுமிலர்போலமலினங்கொளும்பழையகந்தையணிவோரிடத்தும், கடிநாயெனச்சீறியெவரையுஞ்சேர்க்காத கன்னிவாழ்மனையகத்தும், ததிசேர்கடத்திலும் கரகத்திடையிலுஞ்சார்ந்தவாட்டின்றிரளிலும், சாம்பிணமுகத்திலுமிவையெலாங்கவலைபுரி தௌவைவாழிடமென்பர்காண், அதிரூபமலைமங்கைநேசனே மோழைதருமழகனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்ப.

குணகுணமிரண்டினும்பயன்படாதவை.

குணமற்றபேய்முருங்கைத்தழைதழைத்தென்ன குட்டநோய்கொண்டுமென், குலைக்கின்றநாய்மடிசுறந்தென்ன சுறவாதுகொஞ்சமாய்ப்போகிலென்ன, மணமற்றசெம்முருக்கதுபூத்தலர்ந்தென்ன மலராதுபோகிலென்ன, மதுரமில்லாவுவர்க்கடனீர்கறுத்தென்ன மாவெண்மையாகிலென்ன, உணவற்றபேய்ச்சுரை படர்ந்தென்னபடராதுலர்ந்துதான்போகிலென்ன, உதவாதபேர்க்குவெகு வாழ்வுவந்தாலென்னவோங்கு மிடிவரிலென்னகாண், அணியற்றமைங்கொன்றைமாலிகாபரணனேயாதியேபருமைமதவேள்-அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௨௨)

நிறைவுற்றுங்குணங்கெடாமை.

நறைபட்டசந்தனக் கட்டைபழுதாயினுஞ் சார்மணம்பழுதாகுமோ, நக்கபால்சுவரிடக் காய்ச்சினும்மதுகொண்டுசாரமதுரங்குறையுமோ, நிறைபட்டகதிர்மணி யழுக்கடைந்தாலுமதி னீள்குணமழுங்கியிடுமோ, நெருப்பிடையுருக்கினு மடிக்கினுந்தங்கத்தி னிறையுமாற்றுக்குறையுமோ, கறைபட்டபைம்புயன் மறைத்தாலுமதுகொண்டு கதிர்மதிகனம்போகுமோ, கற்றபெரியோர்மகிமை யற்பரறிகிலரேனுங் காசினிதனிற்போகுமோ, அறிவுற்றபேரைவிட் டகலாதமூர்த்தியே யையனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (உ௩)

இதற்குதவிசெய்வதுஇதுவெனல்.

வானவர்பிதிர்க்கண்முச் சுடர்மூவர்கோள்கட்கும் வாழ்வுதருமுதவிபுவனம், வளமிக்கபுவனந்தனக்குமேல்மேலுதவி வாழ்வுபெற்றிடுமன்னராம், தேனமர்நறுந்தொடையல்புனைமன்னவர்க்குதவி சேர்ந்தகுடிபடைவர்க்கமாம், சேர்குடிபடைக்குதவி விளைபயிர்பயிர்க்குதவி சீர்பெறவழங்குமழையாம், மேனிமிர்மழைக்குதவி மடமாதர்கற்பொன்று வேந்தர்தந்நீதியொன்று, வேதியரொழுக்கமொன்றிம்மூன்றுமேயென்று மிக்கபெரியோருரைசெய்வார், ஆனமர்நெடுங்கொடியுயர்த்தவெம்மிறைவனே யதிபனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (உ௪)

இதனைக்கண்டுமகிழ்வது இதுவெனல்.

தந்தைதாய்மலர்முகங்கண்டுநின்றுளிப்ப தவர்தந்தசந்ததியதாம், சந்த்ரோதயங்கண்டுபூரிப்பதுயர்வாவிதங்குபைங்குமுதமலராம், புந்திமகிழ்வாயிரவிவருதல்கண்டகமகிழ்வு பொங்குதாமரைமலர்களாம், போதவும்புயல்கண்டுகண்களித்தேநடம் புரிவதுமயூரவினமாம், சிந்தைமகிழ்வாயுதவு தாதாவினைக்கண்டு சீர்பெறுவதிரவலர்குழாம், திகழ்நீதிமன்னனைக் கண்டுகளிகூர்வதிச் செகமெலாமென்பர்கண்டாய், அந்தியம்வானனையசெஞ்சடாடவியனே யமலனேயருமைமதவேள் அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே

அதுவதுவாகாமை.

உள்ளன்பிலாதபேர் தித்திக்கவேபேசி யுறவாடுமுறவுமுறவோ, உபசரித்தன்புடன் பரிமாறிடாதசோ றுண்டவர்க்கன்னமாமோ, தள்ளாதிருந்துகொண்டொருவர்போய்ப்பார்த்துவரு தக்கபயிர்பயிராகுமோ, தளகர்த்தனொருவனில் லாமன்முன்சென்றிடுந்தானையுந்தானையாமோ, விள்ளாதபோகமில்லாதபெண்மேல்வரு விருப்பமும்விருப்பமாமோ, வெகுகடன்பட்டபேர் செய்கின்றசீவனமு மிக்கசீவனமாகுமோ, அள்ளாதிருங்கருணை யாளனேதேவர்தொழு மாதியேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (உ௬)

நற்குணங்களுக்கிடமாகாதவர்.

வெறிகொண்டமறகடம் பேய்கொண்டுகள்ளுண்டு வெங்காஞ்சொறிப்புதவிலே, வீழ்ந்துதேள்கொண்டிடச சன்மார்க்கமெள்ளளவுமேவுமோமேவாதுபோல், குறைகின்றபுத்தியா யதிலற்பசாதியாய்க்கூடவேயிளமையுண்டாய்க், கொஞ்சமாமதிகார முங்கிடைத்தான்மிக்க குவலயந்தனிலவர்க்கு, நிறைகின்றபுத்தியுஞ் சீலமுமேன்மையுநிதானமும்பெரியோர்கண்மேல்,நேசமும்மீகையும் மிவையெலாங்கனவிலு நினைவிலும்வராதுகண்டாய், அறைகின்றசுருதியின் பொருளானவள்ளலேயண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (உஎ)

இதனால்இன்னமுறையனெனல்.

தண்ணான்முடிக்கவொண்ணாதகாரியம்வந்து தான்முடிப்போன்றமையனாம், தன்றலைக்கிடர்வந்தபோதுமீட்டுதவுவோன் றாய்தந்தையென்னலாகும், ஒன்னார்செயுங்கொடுமை யான்மெலிவுவந்தபோ துதவுவோனிட்டதெய்வம், யுத்திபுத்திகள்சொல்லிமேல்வருங்காரியமுரைப்பவன்குருவென்னலாம், எந்நாளும்வருநன்மைதீமைதனதென்னவே யெண்ணிவருவோன்பந்துவாம், இருதயமறிந்துதன்சொற்படிநடக்குமவ னெவனெனினுமவனேசுதன், ஆங்நாரமும்பணியு மென்னாளுமேபுனையு மண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (உ.அ)

அவரவரிடத்தூடக்குமுறை.

மாதாபிதாவினுக்குள்ளன்புடன்கனிவு மாறாதநல்லொழுக்கம், மருவுகுருவானவர்க்கினியவுபசாரமுள வார்த்தைவழிபாடடக்கம்,காதார்கருங்கண்மனையாடனக்கோசயன காலத்தினயபாஷணம், கற்றபெரியோர்முதியர்வருமாதுலர்க்கெலாங் கருணைசேரருள்விதானம், நீதிபெறுமன்னவரிடத்ததிகபயவினைய நெறியுடையபேர்க்கிங்கிதம, நேயமுளதமர்தமக்ககமகிழ்வுடன்பரிவு நேரலரிடத்தில்வயிரம், ஆதிமநுநூல்சொலும் வழக்கமிதுவாகுமெம தையனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ()

குணத்தைவிட்டுக்குற்றத்தைக்கவர்தல்.

துஷ்டவிகடக்கவியை யாருமேமெச்சுவார் சொல்லுநற்கவியைமெச்சார், துர்ச்சனர்க்ககமகிழ்ந் துபசரிப்பார்வருந் தூயரைத்தள்ளிவிடுவார், இஷ்டமுளதெய்வந் தனைக்கருதிடார்க்கருப் பெண்ணிலேபோய்ப்பணிகுவார். ஈன்றதாய்தந்தையைச் சற்றுமதியார்வேசையென்னிலோகாலில்வீழ்வார், நஷ்டலாபங்களுக்குள்ளானபந்துவரினன்றாகவேபேசிடார், நாளுமொப்பாரியாய் வந்தபுத்துறவுக்கு நன்மைபலவேசெய்குவார், அஷ்டதிசைசூழ்புவியிலோங்குகலிமகிமைகாணத்தனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௰)

குணங்காண்குறி.

கற்றோர்களென்பதைச் சீலமுடனேசொலுங் கனவாக்கினாற்காணலாம், கற்புளாளென்பதைப் பார்க்கின்றபார்வையொடு காணடையினுங்காணலாம், அற்றோர்களென்பதனை யொன்றிலும்வாராவடக்கத்தினாலறியலாம், அறமுளோனென்பதைப் பூததயையென்றுநிலை யதுகண்டுதானறியலாம், வித்தோங்குபயிரைக் கிளைத்துவருதுடியினால் விளையுமென்றேயறியலாம், வீரமுடையோனென்ப தோங்கிவருதைரிய விசேஷத்தினாலறியலாங், அத்தாகுணத்தினால் குலநலந்தெரியலாமண்ணலே யருமைமதவேள், அனுதினமு மனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௩௧)

கூடிற்பயன்படல்.

செத்தைபலகூடியொரு கயிறாயினதுகொண்டு திண்கரியையுங்கட்டலாம், திகழ்ந்தபலதுளிகூடி யாறாயின் வாவியொடு திரளேரி நிறைவிக்கலாம், ஒத்தநுண்பஞ்சுபல சேர்ந்துநூலாயிடினுடுத்திடுங் கலையாக்கலாம், ஓங்கிவருகோலுடன் சிலையுங்கூடினா லுயர்கவிகையாக்கொள்ளலாம், மற்றுமுயர் தண்டுலத் தோடுதவிடுமிகூடின் மல்குமுளைவிளைவிக்கலாம், மனமொத்தநேயமொடுகூடியொருவர்க்கொருவர்வாழின்வெகுவெற்றிபெறலாம், அற்றகனியைப்பொருத் தரிபிரமர்தேடரியவமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௩௨)

அதற்குவெற்றியிடம்.

கலைவலாருக்கதிகசயமதுரவாக்கிலேகாமுகர்க்கதிகசயமோ, கைப்பொருளிலேவரு மருத்துவர்க்கோசயங் கைவிசேஷந்தன்னிலே, நலமுடையவேசையர்க் கழகிலேயரசற்கு நாளும்ரணசூரத்திலே, நற்றவர்க்கதிகசய முலகுபுகழ்பொறையிலே ஞானவேதியர்தமக்கோ, குலமகிமைதன்னிலே வைசியர்க்கோசயங்கூறியதுலாக்கோலிலே, குற்றமில்லாதவே ளாளருக்கோசயங் குறையாதகொழுமுனையிலே, அலையில்குதிரைக்குநடை வேகத்திலதிகசெய மாமென்ப ரருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவ.

ஒன்றில்லாமையாற்பாழ்படல்.

தாம்பூலதாரண மிலாததேவருபூர்ண சந்த்ரனிகர்முகசூனியம் சற்சனரிலாததே வெகுசனஞ்சேர்ந்துவாழ் தரும்பெரியநகர்சூனியம், மேம்பாடிலாதமன் னவர்கள்வந்தாளவதே மிக்கதேசச்சூனியம், மிக்கசற்புத்திர னிலாததேநலமான வீறுசேர்க்ரகசூனியம், சோம்பாத தலைவரில்லாததேவளமுடன் சொல்லுயர்சபாசூனியம், தொல்லுலகிலனைவர்க்கு மாநிதியமில்லதே சுத்தசூனியமென்பர்காண், ஆம்பல்வதனத்தனைக் குகனையீன்றருள்செய்த வத்தனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௩௪)

மூடர்தாரதம்மியம்.

பெண்புத்திகேட்கின்ற மூடருந்தந்தைதாய்பிழைபுறஞ்சொலுமூடரும், பெரியோர்கள்சபையிலே முகமேறிவந்து பிதற்றிடும்பெருமூடரும், பண்புற்றசுற்றஞ்சிரிக்கவேயிழிவான பழிதொழில்செய்திடுமூடரும், பற்றற்றபேர்க்குமுன் பிணைநின்றுபின்புபோய்ப் பரதவித்திடுமூடரும், கண்கெட்டமாடென்னவோடியிரவலர்மீது காய்ந்துவிழ்ந்திடுமூடரும், கற்றறிவிலாதமுழு மூடருக்கிவரெலாங் காண் மூடரைமூடர்காண், அண்கற்றநாவலர்க் காகவேதூதுபோ மையனேயருணைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௫)

இதற்கிதுவேண்டுமெனல்.

தனக்குவெகுபுத்தியுண்டாகினும் வேறொருவர் தம்புத்திகேட்கவேண்டும், தானதிகசூரனே யாகினுங்கூடவே தளசேகரங்கள்வேண்டும், கனக்கின்றவித்துவானாகினுந் தன்னினுங் கற்றோரைநத்தவேண்டும், காசினியையொருகுடையி லாண்டாலும்வாசலிற் கருத்துள்ளமந்திரிவேண்டும், தொனிக்கின்றசங்கீதசாமர்த்தியனாகிலுஞ் சுதிகூட்ட ஒருவன்வேண்டும், சுடர்விளக்காயினு நன்றாய்விளக்கிடத் தூண்டுகோலொன்றுவேண்டும், அனற்கண்ணனேபடிக சங்கநிகர்வண்ணனே யையனேயருணைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௬)

வறுமையின்கொடுமை.

மேலானசாதியி லுதித்தாலுமதிலென்ன வெகுவித்தைகற்றுமென்ன, மிக்கவதிரூபமொடு சற்குணமிருந்தென்ன மிகுமானியாகிலென்ன, பாலானமொழியுடையனாயென்னவாசாரபரனாயிருந்துமென்ன, பார்மீதுவீரமொடுஞானவானாயென்ன பாக்கியமிலாதபோது வாலாயமாய்ப்பெற்ற தாயுஞ்சலித்திடுவள் வந்தசுற்றமுமிகழுமே, மரியாதையில்லாம லனைவரும்பேசுவார் மனைவியுந் தூறுசொல்வாள், ஆலாலமுண்டகனி வாயமீனநேயனே யனகனேயருணைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௭)

ஈனத்துவம்.

இரப்பவன்புவிமீதி லீனனவனுக்கில்லை யென்னுமவ னவனிலீனன், ஈகின்றபேர்தம்மை யீயாமலேகலைத் திடுமூடனவனிலீனன், உரைக்கின்றபேச்சிலேபலனுண்டெனக்காட்டி யுதவிடானவனிலீனன், உதவவேவாக்குரைத் தில்லையென்றேசொலு முலுத்தனே வவனிலீனன், பரக்கின்றயாசகர்க் காசைவார்த்தைகளசொலிப் பலகாலலைந்துதிரியப், பண்ணியேயில்லையென் றிடுகொடியபாவியே பாரிலெல்லோர்க்குமீனன், அரக்கிதழ்க்குமுதவா யுமைநேசனே யெளிய ரமுதமேயருணைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௮)

மறைப்பவனும்வெளிப்படுத்துவனவும்.

செனமித்தவருஷமுமுண்டானவத்தமுங் தீதில்கிரகச்சாரமும், தின்றுவருமௌஷதமுமேலானதேசிகன்செப்பியமகாமந்த்ரமும், புன்மையவமானமுந்தானமும்பைம்பொனணி புனையமடவார்கல்வியும், புகழ்மேவுமானமு மிவையொன்பதுந்தமது புந்திக்குளேவைப்பதே, தன்மமென்றுரைசெய்வரொன்றோர்கருத்தையுந் தன்பிணியையும்பசியையும், தான்செய்தபாவமு மிவையெலாம்வேறொருவர் தஞ்செவியில்வைப்பதியல்பாம், அன்மருவுகண்டனே மூன்றுலகுமீன்றவுமையன்பனேயருமைமதவேள, அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௩௯)

தேவர்கள்காலவளவை.

சதுரயுகமோரிரண்டாயிரம்பிற்படிற் சதுமுகற்கொருதினமதாம் சாற்றுமித்தினமொன்றிலேயிந்த்ரபட்டங்க டாமுமீரேழ்சென்றிடும், மதிமலியுமித்தொகையினயனுயுனூறுபோய் மாண்டபோதொருகற்பமாம், மாறிவருகற்பமொருகோடிசென்றுநெடிய மால்தனக்கோர்தினமதாம், துதிபரவுமித்தொகையிலொருகோடிநெடியமால் தோன்றியேபோய்மறைந்தால், தோகையோர்பாகனேநீநகைத்தணிமுடி துளக்கிடுங்காலமென்பார், அதிகமுளபலதேவர்தேவனேதேவர்கட்கரசனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௰)

தூய்மையிடமும் தூய்மைசெய்வனவும்.

வாம்பரிதனக்கதிகபுனிதமுகமதனிலே மறையவர்க்குயர்புனிதமே, மலரடியிலேபுனி மொளிகள்கண்ணுடிக்கு மாசின்முற்புறமதனிலே, மேம்படும்பசுவினுக்குப்பிற்புறத்திலே மிக்கமடமாதருக்கோ மேனியெல்லாம்புனித மாகுமாசரசமொடு மேவுவனிதையர்தமக்கும், தாம்பிரமதற்குமிகுவெள்ளிவெண்கலமயந் தங்கமீயந்தமக்கும், தரும்புனிதம்வருபெருக் கொடுபுளிசுனஞ்சாம்பல் சாருமண்தாதுசாணம், ஆம்புனிதமிவையென்பர் மாமேருவில்லியேயனகனேயருமைமதவேள, அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௧)

அடங்காதவற்றைஅடக்குமுபாயம்

கொடியபொலியெருதையிரு மூக்கிலுங்கயிறொன்று கோர்த்துவசவிர்த்திகொள்வார், குவலயந்தனின்மதக் களிறதனையங்குசங்கொண்டுவசவிர்த்திகொள்வார், படியில்விஷவானைமந் திரதந்திரத்தினாற் பற்றிவசவிர்த்திகொள்வார், பாய்பரியைநெடியகடி வாளமதுகொடுநடை பழக்கிவசவிர்த்திகொள்வார், விடமுடையதுஷ்டரைச்சேர்பந்துகைக்கொண்டு வீசிவசவிர்த்திகொள்வார், மிக்கபெரியோர்களுங் கோபத்தையறிவால் விலக்கிவசவிர்த்திகொள்வார், அடியவர்துதிக்கவருசெந்தாமரைப்பதத் தையனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௨)

ROJA MUTHIAH
KOTTAIYUR-630 106

ஒளியினுயர்வு,

செழுமணிக்கொளியதன் மட்டிலேயதினுமோ செய்யகச்சோதமெனவே, செப்பிடுங்கிருமிக்கு மிச்சமொளியதனினுந்தீபத்தினொளியதிகமாம், பழுதிலாத்தீவட்டி தீபத்தினதிகமாம் பகல்வத்தியதிலதிகமாம், பாரமத்தாப்பினொளியதிலதிகமதிலுமோ பனிமதிக்கொளியதிகமாம், விழைவுதருபரிதிக்குமனுநீதிமன்னர்க்கும் வீரவிதரணிகருக்கும், மிக்கவொளிதிசைதொறும் போய்விளங்கிடுமென்ன விரகுளோருரைசெய்குவார், அழல்விழிகொடெரிசெய்துமதனவேடனைவென்ற வண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௩)

குணங்குற்றமாதல்.

வான்மதியைநோக்கிடிற் சோர்காமுகருக்கு மாறாதவல்விஷமதாம், மகிழ்நன்றனைக்காணிலிதமிலாவிடசரிய மாதருக்கோவிஷமதாம், மேன்மைதருநற்சுவைபதார்த்தமுஞ்சுரரோக மிக்கபேர்க்கதிகவிஷமாம், வித்தியாதிபர்தமைக்கண்டபோததிலற்ப வீணர்க்கெலாம் விஷமதாம், ஈனமிகுபுன்கவிவலோர்க்கதிகசபைகாணி லேலாதகொடியவிஷமாம், ஏற்றமில்லாதபடுபாவிகட்கறமென்னி லெந்நாளுமதிகவிஷமாம், ஆனதவயோகியர்களிதயதாமரையுறையு மண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௪)

உயிர்வின்றித்தாழ்வுஞ்சிறக்குமிடம்.

வெகுமானமாகிலுமவமானமாகிலு மேன்மையோர்செய்யிலழகாம், விரகமேயாகிலுஞ்சரசமேயாகிலும் விழைமங்கைசெய்யிலழகாம், தகுதாழ்வுவாழ்வுவெகு தருமங்களைச்செய்து சாரிலோபேரழகதாம், சரீரத்திலோரூனமானமெதுவாகிலுஞ் சமர்செய்துவரிலழகதாம், நகமேவுமதகரியி லேறினுந்தவறினு நாளுமதுவோரழகதாம், நாய்மீதிலேறினும்வீழினுங்கண்டபேர் நகைசெய்தழகன்றென்பர்காண், அகமாயமற்றவர்க்கருள்புரியுமையனே யாதியேயருமைமதவேள், அனுதினமுமனதினினை கருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

நல்வினைசெய்தோர்.

சரணெனக்காத்தவன்மெய்யினல்வென்றவன் றனமிளையாதுதவினோன், தந்தைசொன்மறாதவன் முன்னவற்கானவன் றாய்பழிதுடைத்தநெடியோன், வருபிதிர்க்குதவினோன் றெய்வமேதுணையென்றமைந்தன் மனைவியைவதைத்தோன், மாறானதந்தையைத்தமையனைப்பிழைகண்டுமாய்த்துலகின்மகிமைபெற்றோர், கருதரியசிபியரிச்சந்திரன்மாபலி கணிச்சியோன்சுமுத்திரைசுதன், கருடன்பகீரதனுடன்சிறுத்தொண்டனொடு கானவன்பிரகலாதன், அரியவல்விபீஷணனெனுமகாபுருஷரா மத்தனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௯)

தீவினைசெய்தோர்.

வாயிகழ்வுபேசிமிகு யாழ்விழந்தோன்சிவனை வைதுதன்றலை போயினேன், மற்றொருவர்தாரத்தி லிச்சைவைத்துடலெலா மாறு தவடுவாயினோன், தாயத்தினோர்க்குள்ள பங்கைக்கொடாமலே சம்ப த்திழந்துமாய்ந்தோன், தக்கபெரியோர்தலைமை வணங்காமதத்தினாற்ற ந்திவடிவாயலைந்தோன், மாயனைச்சபையதனி னிந்தனைசெய்தொளி கொணவ மணிமுடிதுணிந்துமாய்ந்தோன், வருமகிடனொடுதக்கனயி ராவதன்குருடன் மகன்வழுதிசிசுபாலனும், ஆயுமறிவாளரொடு தே வர்பணிதாளனே யவனிபுகழருமைமதவேள், அநுதினமுமனதினி னைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (சஎ)

நன்னகர்.

வாவிபலகூபமுடனாறருகுசேர்வதாய் மலைகாதிவழியிலுளதாய் வாழைகமுகொடுதெங்கு பயிராவதாய்ச்செந்நெல் வயல்கள்வாய்க்கா ல்களுளதாய், காவிகமலங்குவளை சேரேரியுள்ளதாய்க் கனவர்த்தகர் க்ணமறைவலோர், காணரியபலகுடிக ணிறைவுள்ளதாய்நல்ல காவல னிருக்கையுளதாய்த், தேவராலயமாடல் பாடலணிமாளிகை சிறக்க வுளதாய்ச்சற்சனர், சேருமிடமாகுமோ ரூர்கிடைத்ததிலதிக சீவன முமேகிடைத்தால், ஆவலோடிருந்திடுவ தேசொர்க்க வாசமென்ற றையலாமருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவ ளரறப்பளீசுரதேவனே. (சஅ)

தீநகர்.

ஈனசாதிகள்குடி யிருப்பதாய்முள்வேலி யில்லில்லினுக்குமுள தாய், இணைமுலைதிறந்துதன் தலைவிரித்திடுமாத ரெங்குநடமாட்ட முளதாய்க், கானமொருபக்கமாய் மலையோரமாய்முறைக்காய்ச்சல்க ப்பாதவிடமாய்க், கள்ளர்பயமாய்நெடிய கயறிட்டிறைக்கின்ற கற்கே ணிநீருண்பதாய், மானமில்லாக்கொடிய துர்ச்சனர்தமக்கேற்ற மணி யமொன்றுண்டானதாய், மாநிலத்தோர்தல மிருந்ததனில்வெகுவா ழ்வுவாழ்வதிலுமருநரகிலே, ஆனநெடுநாள்கிடந் தமிழ்தலேசுகமா கு மமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகி ரிவளரறப்பளீசுரதேவனே. (சகூ)

முழுக்குநாள்.

வருமாதிவாரந் தலைக்கெண்ணெயாகாது வடிவமிகுமழகுபோ கும், வளர்திங்களுக்கதிகபொருள்சேருமங்கார வாரந்தனக்கிடர்வரு ம், திருமேவுபுதனுக்கு மிகுபுத்திவந்திடுஞ் செம்பொனுக்குய றிவு போம், தேடியபொருட்சேத மாம்வெள்ளிசனியெண்ணெய செல்வ முண்டாயுளுண்டாம், பரிகாரமுளகாதி வாரந்தனக்கலரிபௌமனு க்கானசெழுமண், பச்சறுகுபொன்னவற் காமெருத்தூளொளிப்பார் க்கவற்காகுமெனவே, அரிதாயறிந்தபே ரெண்ணெய்சேர்த்தேமுழு க்காடுவாரருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (ருய)

மருத்துவன்.

தாதுப்பரீக்ஷைவரு காலதேசத்தொடு சரீரலட்சணமறிந்து, தன்வந்திரிகும்பமுனி தேரர்கொங்கணர்சித்தர் தமதுவாகடமறிந்து, பேதப்பெருங்குளிகை சுத்திவகைமாத்திரைப் பிரயோகமோடுபஸ்மம், பிழையாதயண்டூரசெந்தூரலட்சணம் பேர்பெறுங் குணவாகடம் சோதித்துமூலிகா விதங்கண்டுங்கண்டு தூயதைலம்லேகியம், சொல்பக்குவங்கண்டு வருரோகநிண்ணயந் தோற்றியேயமிர்தகரமாய், ஆதிப்பெருங்கேள்வி யுடையனாயுர்வேத னுகுமெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ()

உண்மையுணர்குறி.

சோதிடம்பொய்யாது மெய்யென்பதறிவரிய சூழ்கிரகணஞ்சாட்சியாம், சொற்பெரியவாகடம் நிசமென்கைபேதிதரு தூயமாத்திரைசாட்சியாம், ஆதியிற்செய்ததவ முண்டில்லையென்பதற்காளடிமையேசாட்சியாம், அரிதேவதேவனென்பதை யறிடமுதநூ லரிச்சுவடியேசாட்சியாம், ஈதனேமாதேவ னென்பதற்கோருத்ர நமகசமகஞ்சாட்சியாம், நாயேனைரட்சிப்ப துன்பாரமரிய னுனுமர்ச்சனைசெய்சாணத், சாதிநாயகமிக்க வேதனுயகனை வண்ணமலையருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

பிறவிக்குணமாறுமை.

கலங்காதசித்தமுஞ் செல்வமுஞ்ஞானமுங் கல்வியுங்கருணைவிளைவும், கருதரியவடிவமும் போகமுந்தியாகமுங்கனரூபமுளமங்கையும், அலங்காதவீரமும் பொறுமையுந்தந்திரமு மாண்மையு மமுதமொழியும், ஆனவிச்செயலெலாஞ் சனனவாசனையினு லாகிவருமன்னீநிலமேல், நலஞ்சேருமொருவனைப்பார்த்தது பெறக்கருதினண்ணுமோரஸ்காளிதன், நற்சுவைதனக்குவர வேம்புதவமேநெடிது நாள்செயினும்வாராதுகாண், அலங்காரமாகமலர் கொன்றைமாலிகைசூடுமண்ணமலையருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௩)

ஊழ்வலி.

கடலளவுரைத்திடுவ ரரிபிரமருருவமுங் காணும்படிக்குரைசெய்வார், காசினியினளவுபிர மாணமதுசொல்லுவார் காயத்தினிலமையறிவார், விடலரியசிவநிலை காட்டுவார்மூச்சையும் விடாமற்றடுத்தடக்கி, மேன்மேலும்போகசாதனைவிளைப்பாரெட்டி விண்மீதினுந்தாவுவார், தொடர்வரியபிரமநிலை காட்டுவாரெண்வகைத் தொகையானசித்தியறிவார், சூழ்வினைவரும்பொழுது சிக்கியுழல்வாரது துடைக்கவொருநான்முகற்கும், அடைவலவெனத்தெரிந் தளவில்பலநூல்சொல்லுமண்ணமலையருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௪)

ஒப்புயர்வில்லாதவை.

வேதியர்க்கதிகமாஞ் சாதியுங்கனகமக மேருவுக்கதிகமலையும், வெண்டிரைகொழித்துவரு கங்காநதிக்கதிக மேதினியிலோடுநதியும், சோதிதருமாதவர்க்கதிகமாங்காந்தியுஞ் சூழ்கனற்கதிகசுசியும், தூய தாய்தந்தைக்குமேலானதெய்வமுஞ் சுருதிக்குயர்ந்தகலையும், ஆதிவடமொழிதனக்கதிகமாமொழியுநுகரன்னதானந்தனிலுமோர், அதிக தானமுமில்லையென்றுபலநூலெலா மாராய்ந்தபேருரைசெய்வார், ஆதவன்பிரமன்விண்ணவர்முனிவர்பரவவருமண்ணலையருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே()

வீண்செயல்.

வேட்கஞ்சேர்வோரும் வீணரோவீணுரை விரும்புவோரவரின் வீணர், விருந்துகண்டிலலாடனக்கஞ்சியோடிமறைவிரகிலோரவரின் வீணர் நாட்டந்தருங்கல்வி யில்லோரும்வீணரோ நாடியவர்மேற்கவி சொல்வார், ஞானிலந்தனில்வீண ரவரினும்வீணரோ நரரைச்சுமக்குமெளியோர், தேட்டறிவிலாதபெரு வீணரேயவரினுஞ்சேரொருவரத்துமின்றிச், செலவுசெய்வோரதிக வீணராம்வீணரைத் திரியுமெளியேனையாட்கொண், டாட்டஞ்செயும்பதாம் புயமுடியின்மேல்வைத்தவமலனையருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௬)

உதவியின்றிக்கெடுவன.

மூப்பொருவரில்லாதகுமரிகுடிவாழ்க்கையு மூதரணிலாதநகரும், மொழியும்வெகுநாயகருஞ்சேரிடமும்வருமெதுகை மோனையில்லாதகவியும், காப்பமைவிலாததோர்நந்தவனமும்நல்ல கரையிலாநிறையேரியும், கசடறக்கற்காதவித்தையும்முபதேச காரணநிலாததெளிவும், கோப்புளவினோதமுடை யோரருகுபுகழாத கோதையர்செய்கூத்தாட்டமும், குளிர்புனனிறைந்துவரு மாற்றோரமதினின்று கோடுயர்ந்தோங்குதருவும், ஆப்பதில்லாததோரிவையெலாமொன்றுக்குமையனையருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௭)

இவையேபோதுமெனல்.

பொய்யாதவாய்மையுஞ் சீலமுஞ்சார்ந்துளோர் பூவலஞ்செய வேண்டுமோ, பொல்லாதகொலைகளிலாதநன்னெறியுளோர் புகழறஞ்செயவேண்டுமோ, நையாதகாமத்தைலோபத்தைவிட்டபேர் நல்லதஞ்செயவேண்டுமோ, நன்மனைசுத்தியுண்டானபேர்மேலுமொருநதிபடிந்திடவேண்டுமோ, மெய்யாநினடியைப்பரவுவோருன்பதம் விரும்பிவழிபடவேண்டுமோ, வேதியர்தமைப்பூசை பண்ணுவோர்வானவரைவேண்டியர்ச்சனைசெய்வரோ, ஐயாருடன்கமலைசோணசைலந்தில்லை யதிபனையருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௮)

ஆரியராவோர்.

பதின்மதிலொருத்தர்சபை மெச்சிடப்பேசுவோர் பாடுவோர்நூற்றி
லொருவர், பார்மீதிலாயிரத்தொருவர்விதிதப்பாது பாடிப்ரசங்கமிடு
வோர், இதனருமையறிகுவோர் பதினாயிரத்தொருவ ரிதையறிந்தித
யமகிழ்வால், ஈகின்றபேர்புவியிலேயருமையாகவே இலட்சத்திலே
யொருவராம், துதிபெருகவருமூன்று காலமுமறிந்துமெய்த் தூயர்
கோடியிலொருவராம், தொல்லுலகுபுகழ்காசியேகாம்பரங்கைலை சூ
ழுமவனுசிபோரூர், அதிகமுளவெண்காடுசெங்காடுகாளத்தியத்தனே
யருமைமதவேள், அநுதினமுமனதினினைதரு சதுரகிரிவளரறப்பளீ
சுரதேவனே. (௫௯)

கற்புமேம்பாடு.

தன்கணவனுருவமாய்த் தற்புணரவந்தோன் றனக்கிணங்காதநி
றையாள், தழற்கதிரெழாமலும்பொழுதுவிடியாமலுஞ் சாபங்கொடு
த்தசெயலாள், மன்னிவளரழன்மூழ்கி யுலகரியவேதனது மகிழ்நனை
ச்சேர்ந்தபரிவாள், மைந்தனைச்சுடவந்த விறைவன்றடிந்தவடி வாண்
மாலையானகனிவாள், நன்னதிபடிந்திடுவதென்னவாரழகன்மூழ்கி நா
யகனைமேவுதயவாள், நானிலம்புகழ்சாலிபேர்பெறுநாளாயினிநளின
மலர்மேல்வைதேகி, அன்னமெனவருசந்திர மதிதுரோபதியென்ப
ராதியேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளா
றப்பளீசுரதேவனே. (௬௰)

கோடியுடுக்குநாள்.

கறைபடாதொளிசேருமாதிவாரந்தனிற் கட்டலாம்புதியசீலை, க
லைமதிக்காகாது பலகாலுமழையினிற் கடிதுநனைவுற்றெழிதரும், கு
றைபடாதிடர்வரும்வீரியம்போமரிய குருதிவாரந்தனக்குக், கொஞ்ச
நாளிற்கிழியும்வெற்றிபோம்புந்தியிற்குருவாரமதிலணிந்தால், மறை
படாதழகுண்டு மேன்மேலுநல்லாடை வருமினியசுக்கிரற்கோ, வாழ்
வுண்டுதிருவுண்டுபொல்லாதசனியற்கு வாழ்வுபோமரணமுண்டாம்
அறைகின்றவேதாக மத்தின்வடிவாய்விளங் கமலனையருமைமதவே
ள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ()

ச கு ன ம்.

சொல்லரியகருடன்வா னரமரவமூஞ்சூறு சூகரங்க்ரிகலைமான்
துய்யபாரத்வாசமட்டையெலிபுன்கூகை சொற்பெருகமருவுமாந்தை
வெல்லரியகரடிகோட்டான்பூனைபுலிமேல்விளங்குமிருநாவுடும்பு, மிகு
வுணாசெயிவை யெலாம்வலமிருந்திடமாகில் வெற்றியுண்டதிகநலமா
ம், ஒல்லையில்வழிப்பயண மாகுமவர்தலைதாக்க லொருதுடையிருத்த
ல்பற்றல், ஒருதும்மலரணையிட லிருமல்போகேலென்ன யுபசுருதி
சொல்லிவையெலாம், அல்லறருநல்லவல வென்பர்முதியோர்பரவும
நலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளர
றப்பளீசுரதேவனே. (௬௨)

இதுவுமது.

நரிமயில்பசுங்கிள்ளை கோழிகொக்கொடுகாக்கை நாவிசிச்சிலியோந்திதான், ஞமலியான்கடுத்தவாய்ச் செம்போத்துடன்மேதி நாடரியசுரபிமறையோர், வரியுழுவைமுயலிவை யனைத்தும்வலமாயிடின் வழிப்பயணமாகைநன்றும், மற்றுமிவையன்றியேகுதிரையனுமானித்தல் வாய்ச்சொல்வாவாவென்றிடல், தருவிளைதொனித்திடுதல் கொம்புகிடுமுடிமுரசு தப்பட்டையொலிவல்வேட்டுத், தனிமணிமுழக்கெழுதலிவையெலாமூர்வழி தனக்கேகநன்மையென்பார், அருணகிரணேதயத் தருணபானுவையனைய வண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

இதுவுமது.

தலைவிரித்தெதிர்வருத லொற்றைப்பிராமணன் றவசிசன்னசிதட்டான், தனமிலாவெறுமார்பி மூக்கறைபுல்விறகு தட்டைமுடிமொட்டைத்தலை, கலன்கழிமடந்தையர் குசக்கலஞ்செக்கான் கதித்ததிலதைலமிவைகள், காணவெதிர்வரவொணு நீர்க்குடமெருக்கூடை கனிபுலாலுபயமறையோர், நலமிகுசுமங்கலை கிழங்குரூதகமங்கை நாளும்வண்ணானழுக்கு, நசைபெருகுபாற்கலசமணிவளையன்மலரிவை கணுடியெதிர்வரநன்மையாம், அலைகொண்டகங்கைபுனை வேணியாய்பரசனியுமண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினைத ருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௬௪)

உணவில்விலக்கு.

கைவிலக்குக்கொளும் பாலசப்பால்வருங் காராக்கறந்தவெண்பால், காளான்முருங்கைசுரை கொம்மடிபழஞ்சோறு காந்திக்கரிந்தசோறு, செவ்வையில்சிறுக்கீரை பீர்க்கத்திவெள்ளுப்பு தென்னைவெல்லமலாவகம், சீரிலாவெள்ளுள்ளிபிருள்ளியிங்கொடு சிறப்பில்வெண்கத்திரிக்காய், எவவமில்சிவன்கோயி னிர்மாலியங்கிரண மிலகுசுடரில்லாதவூண், இவையெலாஞ்சீலமுடை யோர்களுக்காகா வெனப்பழையநூலுறைசெயும், ஐவகைப்புலன்வென்ற முனிவர்விண்ணவர்போற்று மமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௬௫)

நற்பொருளிற்குற்றம்.

பேரானகங்கா நதிக்கும்தன்மேல்வரும் பேனமேதோஷமாகும், பெருகிவளர்வெண்மதிக் குள்ளுட்களங்கமேபெரிதானதோஷமாகும், சீராந்தபோதனர்க்கொருவர்மேல்வருகின்ற சீற்றமேதோஷமாகும், தீதின்முடிமன்னவர் விசாரித்திடாதொன்று செய்தவர்மேற்றோஷமாம், தாராளமாமிகத் தந்துளோர்தாராமை தானிரப்போர்தோஷமாம், சாரமுளநற்கருப் பஞ்சாறுகைப்பதவர்தாலஞ்செய்தோஷமாகும், ஆராயுமொருநான்மறைக்குமெட்டாதொளிருமண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள் ரறப்பளீசுரதேவனே. (௬௬)

மனைகோல்வதற்குமாதம்.

சித்திரைத்திங்கடனின் மனைகோலமனைபுகச் செல்வமுண்டதினுநலமே, சேரும்வைகாசிக்கு மேனுளரன்புரந் தீயிட்டதானியாகா வெற்றிகொளிராகவன் றேவிசிறைசேர்கடகம் விறல்லவாவணிசுகம் மேவிடுங்கன்னியிரணியன்மாண்டதாகாது மேன்மையுண்டைப்பசிக்கே, உத்தமங்கார்த்திகைக்காகாதுமார்கழியி லோங்குபாரதம்வந்தநாள், உயர்வுண்டுமகரத்தின் மாசிமாதத்தில்விடமும்பர்கோனுண்டதாகா, தத்தநீமாரனை யெரித்தபங்குனிதானு மாகுமோ வருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவ.

விருந்துவாரம்.

செங்கதிர்க்குறவுபோம் பகைவருமவிருந்தொருவர் செய்யொணாதுண்ணாது, திங்களுக்குறவுண்டென்மையாம்பகைவருஞ்செவ்வாய்விருந்தருந்தார், பொங்குபுதனன்மையுண் டுறவாம்விருந்துணப்பொன்னவற்கதிகபகையாம், புகரவற்காகிலோ கெடுநாள்விரோதமாய்ப் போனவுறவுந்திரும்பும், மங்குனிகர்சனிவார நல்லதாமிதனினு மனமொத்திருந்தவிடமே, வாலாயமாய்ப்போய் விருந்துணவிருந்துதவ வாய்த்தநாளென்றறியலாம், அங்கையில்விளங்கிவளர் துங்கமழுவாளனேயண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௮)

பூப்புவாரம்.

அருக்கனுக்கதிரோகி யாவளற்சோமனுக் கானகற்புடையளாவள், அங்காரகற்குவெகு துக்கியாவாள்புந்தி யளவில்லைபைங்குழவிபெறுவாள், திருத்தகுவியாழத்தின் மிக்கசம்பத்தினொடு சிறுவனைப்பெற்றெடுப்பாள், சீருடையபார்க்கவற் கதிபோகவதியுமாந் திருவுமுண்டாயிருப்பாள், கருத்தழிந்தெழில்குன்றி வறுமைகொண்டலைகுவாள் காரிவாரத்திலாகில், களபமுலைமடமாதர் புஷ்பவதியாம்வார காலபலனென் றுரைசெய்வார், அருத்தியுடனெளியேனை யாட்கொண்ட சோதியேயண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௯)

பூப்புலக்னம்.

வறுமைதப்பாதுவரு மேடத்திலிடபத்தின் மாறாதுவிபசாரியாம், வாழ்வுண்டு போகமுண் டாகுமிதுனங்கடகம் வலதினிற்பிறனையணுவாள், சிறுமைசெயுமிடிசேர்வண் மிருகேந்திரற்கெனிற் சீர்பெறுவள்கன்னியென்னில், செட்டுடையதுலையெனிற் பிணியாள்மெலிந்திடுவடேளினுக்குத்தனுசெனில், நெறிசிதைவள்பூருவத்தபரநெறியுடையளா நீண்மகரமானமிலளாம், நிறைபோகவதிகும்பமெனின்மீனமென்னிலோ நெடியபேரறிவுடையளாம், அறிவாளர்மடமாதர் தமையறியிராசிபலனதுவென்பரருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௱)

தீவுங்கடலும்.

நாவலந்தீவினைச் சூழ்கருங்கடலளவுலட்சம்யோசனையிதனையே நாடொறுஞ்சூழ்வதிலவந் தீவதைச்சூழ்த னற்கழைச்சாற்றின்கடல் மேவுமிதுசூழ்வது குசத்தீவதைச்சூழ்தன் மிகுமதுக்கடலதனையே விழைவொடுஞ்சூழ்தல்கிரவுஞ்சதீவம்மிதனின் மேர்சூழ்த னெய்க்கடலதாம், பூவிலிதுசூழ்தல்சாகத்தீவமிங்கிதைப் போர்ப்பதுதிருப்பாற்கடல், போதவதுசூழ்தல்சான் மலிதீவமாந்தயிர்ப் புணரியப்பாலுமப்பால், ஆவலுறுபுட்கரத் தீவாமிதைச்சூழ்வ தரியபுனலருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவ

மேலானபொருள்கள்.

சுழிசுத்தமாயிருந் ததிலும்படைக்கான தூரகமோர்மாணிக்கமாம், சூழ்புவிக்கரசனு யதிலேவிவேகமுள துரையுமோர் மாணிக்கமாம், பழுதற்றவதிருப வதியுமாய்க்கற்புடைய பாவையோர்மாணிக்கமாம், பலகலைகள்கற்றறி யடக்கமுளபாவலன் பார்க்கிலோர்மாணிக்கமாம், ஒழிவற்றசெல்வனு யதிலேதியாகியா முசிதனோர்மாணிக்கமாம், உத்தமகுலத்துதித் ததிலுமோமெய்ஞ்ஞான முடையனோர் மாணிக்கமாம், அழிவற்றவேதாக மத்தின்வடிவாய் விளங்கமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (எஉ)

உண்டியிலையுமுறையும்.

வாழையிலைபுன்னபுர சுடனற்குருக்கத்தி மாப்பலாத் தெங்குபன்னீர், மாசிலமுதுண்ணலா முண்ணுதவோவரசுவனசஞ்செழும்பாடலம், தாழையிலையத்தியா லேரண்டபத்திரஞ் சகதேவமுண்முருக்குச், சாருமிவையன்றிவெண் பாலெருக்கிச்சிலிலை தனினுமுண்டிடவொண்ணுதால், தாழ்விலாச்சிற்றுண்டிநீரடிக்கடிபருகல் சாதங்கள்பலவருந்தல், சற்றுண்டன்மெத்தவூ ணித்தனையுமெய்ப்பிணி தனக்கிடமெனப்பருகிடார், ஆழிபுடைசூழுலகில் வேளாளர்குலதிலகனுகுமெமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (எங)

கவிஞர்வறுமை.

எழுதப்படிக்கவகை தெரியாதமூடனை யிணையிலாச்சேஷனென்றும் ஈவதில்லாதகனை லோபியைச்சபையதனிலிணையிலாக்கர்ணனென்றும் அழகற்றவெகுகோர ரூபத்தையுடையோனை யதிவடிவமாரனென்றும், ஆயுதமெடுக்கவுந் தெரியாதபேடிதனை யாண்மைமிகுவிஜயனென்றும், முழுவதும்பொய்சொல்லி யலைகின்றவஞ்சகனைமொழியரிச்சந்தரனென்றும், மூதுலகிலிவ்வணஞ்சொல்லியேகவிராஜர் முறையின்றியேற்பதென்னே, அழலெனவுதித்துவரு விஷமுண்டகண்டனேயமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதரு சதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (எச)

ROJA MUTHIAH

கவிஞன்.

தெள்ளமிர்தகாரையென மதுரங்கதித்தலைந் தேன்மடைதிறந் ததெனவே, செப்புமுத்தமிழிஞெடு நாற்கவிகைநாற்பொருடெரிந் துரைசெய்திறமையுடனே, விள்ளரியகாவியத் துட்பொருளலங்காரம்விரியிலக்கணவிகற்பம், வேறுமுளதொன்னூல் வழக்குமுலகத்தியல்பு மிக்கப்ரபந்தவண்மை, உள்ளவெல்லாமறிந் தலையடங்குங்கடலொத்ததிகசபைகண்டபோர், தோங்கலையொலிக்கின்றகடல்போற்ப்ரசங்கமதுரைப்பவன்கவிஞனுகும், அள்ளிவிஷமுண்டகனி வாயனேயனே யமலனேயருமைமதவேள், அனுதினமு மனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (எ௫)

நற்சார்பு.

காணரியபெரியோர்க டெரிசனம்லபிப்பதே கண்ணிணைகள்செய்புண்ணியம, கருணையாயவர்சொன்மொழி கேட்டிடலபிப்பதிரு காதுசெய்திடுபுண்ணியம், பேணியவர்புகழையே துதிசெயலபித்திடுதல் பேசில்வாய்செய்புண்ணியம், பிழையாமலவர்தமைத் தொழுதிடலபிப்பதுகை பெரிதுசெய்திடுபுண்ணியம், வீணைறிசெலாமலவர் பணிவிடைலபிப்பதுன் மேனிசெய்திடுபுண்ணியம், விழைவொடவர் சொற்படி நடந்திடலபிப்பதே மிக்கபூருவபுண்ணியம், ஆணவமெனுங்களைகளைந்தறிவினைத்தந்த வண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (எ௬)

பிறந்தநாளோடுவருகிறவாரபலம்.

சென்மநக்ஷத்திரத் தாதிவாரம்வரிற் றீராதலைச்சலுண்டாம்,திங்களுக்காகில்வெகு சுகபோசனத்திஞெடு திருமாதினருளுமுண்டாம், வன்மைதருமங்கார வாரம்வந்தாற்சிறிதும் வாராதுசுகமதென்பார், மாசில்பலகலைபயில்வர் மேன்மையாம்புந்தியெனும் வாரத்துடன்கூடினல், நன்மைதருகுருவார மதுசேர்ந்துவரிலாடை நன்மையுடனேவந்திடும், நாரியருடன்போக மிகவுமுண்டொருவெள்ளிநல்லவாரத்தில்வந்தால், அன்மருவுபீடையுண் டாமென்பர்சநியினுக் கமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (எஎ)

இசையுடையவர்க்கு இதுவில்லையெனல்.

பொன்னுசை யுள்ளவர்க் குறவேது குருவேது பொங்குபசியுள்ளபேர்க்குப், போதமேது சுசியேதுருசியேது மயல்கொண்டு பொதுமாதர் விழிவலையிலே, எந்நாளு மலைபவர்க் கச்சமொடு வெட்கமேதென்றுமேகல்வியதின்மேல், இச்சையுளபேர்க்கதிக சுகமேது துயிலேது வெளிதாயிருந்துகொண்டே, பன்னுளுமலைபவர்க் கிகழேது புகழேதுபாரிலொருவர்க்கதிகமே, பண்ணியிடுமூடருக்கறமேதுமறமலாற் பகர்நிளையமொன்றுளதுகாண், அன்னவருகரி யுரித்தணியுமெய்யனே யமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே (எஅ)

மழைநாட்குறிப்பு

சித்திரைத்திங்கள் பதின்மூன்றுக்குமேனல்ல சிரானபரணிமழையும், தீதில்வைகாசியிற்பூரணைகழித்தபின் சேருநாலாநாளினில், ஒத்துவருமழையுமவ்வானியிற்றேய்பிறையி லேகாதசியினில், ஒளிர்பரிதிவீழ்பொழுதின் மந்தாரமும்மழையுமுண்டாயிருந்தாயிடில், பத்திவருதேதியைந் தினிலாதிவாரமும் பகருமாவணிமூலநாள், பரிதியுமறைந்திடக்கனமழைபொழிந்திடப்பாரில்வெகுவிளைவுமுண்டாம், அத்தனேபைங்குவளைமாலையணிமார்பனே மண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதரு சதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (எகூ)

இருந்துமுதவாமை.

சமயத்திலுதவாதநிதியமேன்மிக்கதுயர் சார்பொழுதிலாதகிளையேன், சபைமுகத்துதவாத கல்வியேனெதிர்வரு சமரத்திலாதபடையேன், விமலனுக்குதவாத பூசையேனருமிருள் வேளைக்கிடாதசுடரேன், வெம்பசிக்குதவாதவன்னமேனீடுகுளிர் வேளைக்கிலாதகலையேன், தமதுதளர்வேளைக் கிலாதவோர்மனைவியேன் சரசத்திலாதநகையேன், சாமரணகாலத்தி லுதவாதபுதல்வனேன் றரணிமீதென்பர்கண்டாய், அமரர்க்குமுனிவர்க்கு மொருவர்க்குமெட்டாத வாதியேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அ0)

மறையோர்சிறப்பு

ஓராறுதொழிலையுங் கைவிடார்சவுசவிதி யொன்றுதப்பாதுபுரிவார், உதயாதியிற்சென்றுநீர்படிகுவார்கால மொருமூன்றினுக்குமறவா, தாராய்ந்துகாயத்ரி யதுசெபிப்பார்நாளு மதிதிபூசைகள்பண்ணுவார், யாகாதிகருமங்கள்மந்த்ரகிரியாலோப மின்றியேசெய்துவருவார், பேராசைகொண்டிடார் வைதிகல்மார்க்கமே பிழையாதிருக்குமறையோர், பெய்யெனப்பெய்யுமுகி லவர்மகிமையெவர்களும் பேசுதற்கரிதரிதுகாண், ஆரார்நெடுஞ்சடில வமலனேயெனையாளு மண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அக)

அரசர்சிறப்பு.

மநுநீதிமுறைமையும் பாராசர்கொண்டாட வருமதிகாரணவீரமும், வான்விஜயமொடுசூரச சாதனவிசேஷமும் வாசிமதகரியேற்றமும், கனமாமமைச்சரும், பலமானதுர்க்கமுங்கைகண்டபோர்படைஞரும், ரதகசபதாதியுந் துரகப்ரவாகமுங் காலதேசங்களெவையும், இனிதாயறிந்தஸ்தா னபதிகளொடுசமர்க் கிளையாததளகர்த்தரும், என்றும்வற்றாததனதானியசமுத்திரமு மேற்றமுள்குடிவர்க்கமும், அனைவோருமெச்சவிங்கிவையெலாமுடையபே ரரசராமருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ()

வைசியர்சிறப்பு.

நீள்கடல்கடந்திடுவர் மலையாளமும்போவார் நெடிதுதூரந்திரிந்து, நினைவுதடுமாறார்கள்சலியார்களபொருள்தேடி நீணிலத்தரசுபுரியும், வாணுழவனைத்தமதுகைவசஞ்செய்வார்கள்வருமிடம்வராதவிடமும், மனதையுமறிந்துதவி யொன்றுநூறாயிட வளர்ப்பவருதுலைதுலக்கும், ஆள்விடுவர்மலிவுகுறை வதுவிசாரித்திடுவ ரளவில்பற்பலசரக்கும், அமைவுறக்கோள்வர்விற் பார்கணக்கிலணுவு மறவிடார்செலவுவரிலோ, ஆவியொத்தேதமலையி னளவுங்கொடுத்திடுவ ரருள்வசியரருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௮௩)

வேளாளர்சிறப்பு.

யசனுதிகருமமுந் தப்பாமல்வேதிய ரியற்றிநல்லோர்பெறுவதும் இராச்யபாரஞ்செய்து முடிமன்னர்வெற்றிகொண் டென்றுநற்பேர்பெறுவதும், வசனுதிதப்பாது தனதானியந்தேடி வசியர்நல்லேர்பெறுவதும், மற்றுமுளபேரெலா மிடியென்றிடாததிகவளமைபெற்றோர்பெருவதும், திசைதோறுமுள்ளபலதேவாலயம்பூசைசெய்யநல்லேர்பெறுவதும், சீர்கொண்டபைங்குவளை மாலைபுனைவேளாளர் செய்யுமேழிப்பெருமைகாண், அசையாதுவெள்ளிமலை தனின்மேவிவாழ்கின்றவண்ணலேயருமைமதவேள, அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௮௪)

தானுதிபதிமந்திரி சேனுதிபதிகளினியல்பு.

தன்னரசர்வலுமையும்பரராசரெண்ணமுஞ் சாலமேல்வருகருமமும், தானறிந்ததிபுத்தியுத்தியுண்டாயினேன் றனுதிபதியாகுவான், மன்னவர்மனத்தையுங் காலதேசத்தையும் வாழ்குடிபடைத்திறமையும், மந்திராலோசனையுமெல்லாமறிந்தவன் வளமானமதிமந்திரி துன்னியபடைக்குணங்கரிபரிபரீக்ஷையே சூழ்பகைவர்புரிசூழ்ச்சியும், தோலாதவெற்றியுந்திடமானசித்தியுள் சூரனேசேனுதிடன், அன்னையிலுநல்லமலைமங்கைபங்காளனே யனகனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௮௫)

இராயசகரணீகர்சிரப்பு.

வருமோலையுத்தரத்தெழுதிவருபொருளினல் வரவிடுப்போன்மனதையும், மருவிவருகருமமுந் தேசகாலத்தையும்வருகரதலாமலகமா, விரைவாயறிந்தரச ரெண்ணிலெண்ணினையள விடவெழுதவாசிக்கவும், வெற்றிகொண்டேபெரிய புத்தியுடையோன்புவியின்மேன்மைராயசகாரனும், கருவாயறிந்துதொகைபேராறுநொடியினிற்கடிதேற்றிடக்குறைக்கக், கடுகையொருமலையாக்கமலையையொரு கடுகுமாக்காட்டுவோன்கருணீகனும், அருவாகியுருவாகி யொளியாகிவெளியாகுமண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௮௬)

கோபத்தின்கொடுமை.

கோபமேபாவங்களுக் கெலாந்தாய்தந்தை கோபமேகுடிகெடுக்கும், கோபமேயொன்றையுங் கூடிவரவொட்டாது கோபமேதுயர் கொடுக்கும், கோபமேபொல்லாது கோபமேசீர்கேடு கோபமேயுறவறுக்கும், கோபமேபழிசெயுங் கோபமேபகையாளி கோபமேகருணைபோக்கும், கோபமேயீனமாங்கோபமேயெவரையுங் கூடாமலொருவனுக்கும், கோபமேமறலிமுன் கொண்டுபோய்த் தீயநரகக்குழியினிற்றள்ளுமால், ஆபத்தெலாந்தவிர்த் தென்னையாட்கொண்டருளுமண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அஎ)

பல்துறை.

தான்புரிதவத்தையுங் கொடையையும்புகழுவோர் தங்களுக்கவைதழைவுறா, சற்றுமறிவில்லாம லந்தணரைநிந்தனைசெய் தயவிலோராயுள்பெருகார், மேன்படுநறுங்கலவை மாலைதயிர் பால்புலால் வீடுநற்செந்நெலிவைகள், வேறொருவர்தந்திடினு மருமொழியறிந்தபேர் விலைகொடுத்தேகொள்ளுவார், தேன்கனிகிழங்குவிறகிலையிவையனைத்தையுந்தீண்டரியநீசரெனினும், சீர்பெறவளிப்பரோ விகழாது கைக்கொள்வர் சீலமுடையோரென்பரால், ஆன்கொடியுயர்த்தவுமைநேசனேயீசனேயண்ணலேயருமைமதவேள், அனுதினமு மனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அஅ)

தத்துவத்திரவியம்.

பூதமோரைந்துடன் புலனைந்துஞானம் பொருந்துமிந்திரியமைந்து, பொருவில்கன்மேந்திரியமைந்துமனமாதியாம் புகலரியகரணநான்கே, ஓதிநேரிவையாத்ம தத்துவமெனச்சொல்வ ருயர்காலநியதிகலையோ, டோங்கிவருவித்தைரா கம்புருடன்மாயையென் றுரைசெய்யுமோரேழுமே, தீதில்வித்யாதத்துவமென் றிடுவரிவையலாற்றிகழ்சுத்தவித்தையீசன், சீர்கொள்சாதாக்கியஞ் சத்திசிவமைந்துமே சிவதத்வமென்றறைகுவார், ஆதிவடநீழலிற் சனகாதியர்க்கருள்செ யண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அகூ)

மன்மதபாணமும்-அவற்றின்குணமுதலியவும்.

வனசஞ்செழுஞ்சூத முடனசோகந்தவள மலர்நீல மிவ்வையைந்துமே, மாரவேள்கணைகளா மிவைசெயுங்குணமுளரி மனதிலாசையையெழுப்பும், வனவிலொண்சூதமலர் மெய்ப்பசலையுண்டாக்கு மிகவசோகந்துயர்செயும், வீழ்ந்திடுங்குளிர்முல்லை நீலமுயிர்போக்கிவிடுமேவுமிவைசெயுமவத்தை, நினைவிலதுவேநோக்கம் வேறொன்றிலாசையற நெட்டுயிர்ப்பொடுபிதற்றல், நெஞ்சந்திடுக்கிடுதலனம்வெறுத்திடல்காய்ச்சனோர்தன்மௌனம்புரிகுதல், அனையவு மிருண்டில்லையென்னவீரைந்துமா மத்தனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (கூ௦)

மன்மதனுபகரணங்கள்.

வெஞ்சிலைசெழுங்கழைவிஞாரிகருவண்டினமேல்விடுங்கணைகள்லராம், வீசிடுந்தென்றல்தேர் பைங்கிள்ளையேபரிகளவேழங்கெடாதவிருளாம், வஞ்சியர்பெருஞ்சேனைகைதையுடைவாணெடியவண்மைபெறுகடன்முரசமாம், மகரம்பதாகைவருகோகிலங்காகளம் மனதேபெரும்போர்க்களம், சஞ்சரிகைவிசைபாடல் குமுதநேயன்கவிகைசாரிரதியேமனைவியாம், தறுகண்மடமாதரிள முலைமகுடமாமல்குல்தவருதிருக்குமிடமாம், அஞ்சுகணைமாரவேட் கென்பரெளியோர்க்கெலாமமுதமேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௧)

பகைகொளத்தகாதவர்.

மன்னவரமைச்சர்தூர்ச் சனர்கோளர்தூதரொடு மாறுதமர்மமுடையோர், வலுவர்கரணீகர் மிருபாகஞ்செய்தன்னமிடு மடையர்மந்திரவாதியர், சொன்னமுடையோர்புலையருபதேசமதுசெய்வோர் சூழ்வயித்தியர்கவிஞைதகள், சொற்றிடும்புலவரிவர் பதினைந்துபேரொடுஞ்சொற்பனந்தனிலாகிலும், நன்னெறியறிந்தபேர் பகைசெய்திடார்களிந்நானிலத்தென்பர்கண்டாய், நாரியோர்பாகனே வேதாகமம்பரவுநன்பனேயன்பர்நிதியே, அன்னமூர்பிரமனுங் கண்ணனுங்காணுதவண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௨)

இதாகிதஞ்செய்துபயன்கொள்வன.

சுவைசேர்கரும்பைவெண்பாலைப்பருத்தியைச்சொல்லுநன்னெல்லைஎள்ளைத், தூயதெங்கின்கனியை யெண்ணுததுட்டனைத்தொண்டனைத்தொழுதொழும்பை, நவைதீருமாறுகண்டித்தே பயன்கொள்வர்நற்றமிழ்க்கவிவாணனை, நலமிக்கசெழுமலனை யோவியமெனத்தக்க நயமுள்ளநாரியர்தமைப், புவிமீதிலுபகார நெஞ்சனைச்சிறுவனைப்போர்வீரனைத்தூயனைப், போதவும்பரிவோடி தஞ்செய்யமிகுபயன்புகழ்பெறக்கொள்வர்கண்டாய், அவமதிதவிர்த்தென்னை யாட்கொண்டவள்ளலே யண்ணலேயருமைமதவேள், அனுதினமு மனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௩)

தருமம்.

பெறுமில்பெறுவித்தலொடு நாளோலைநாடொறும் பிள்ளைகளருந்திடும்பால், பேசரியசத்திரமடமாவுரிஞ்சுகல்பெண்போக நாவிதன்வண்ணன், மறைமொழிகணுடிதண்ணீர் தலைக்கெண்ணெய்பசு வாயிலுறைபிணமடக்கல், வாவியிறுமுயர்மீட்டறின்பொருளடைக்காய் வழங்கல்சுண்ணும்புதவுதல், சிறையுறுபவர்க்கமுது வெற்றிலங்காத்தல்பொழில்செய்தல்முன்னூலின்மணந், திகழ்விலங்கூண்பிச்சை யறுசமயருக்குண்டி தேவராலயமவுஷதம், அறைதல்கற்போர்கன்னநாலெட்டறங்களுமுனன்னைசெய லருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௪)

இல்லறம்.

தந்தைதாய்சற்குருவை யிட்டதெய்வங்களைச் சன்மார்க்கமுளமனைவியைத், தவறுதசுற்றத்தையேவாதமக்களைத் தனைநம்பிவருவோர்களைச், சிந்தைமகிழ்வெய்தவே பணிவிடைசெய்வோர்களைத் தென்புலத்தோர்வறிஞரைத், தீதிலாவதிதியைப் பரிவுடையதுணைவரைத் தேனுவைப்பூசுரர்தமைச், சந்ததஞ்செய்கடனை யொன்மிவைபிழையாது தான்புரிந்திடலில்லறஞ், சாருநலமுடையராந் துறவறத்தோருமிவர் தம்முடன்சரியாயிடார், அந்தரியுயிர்க்கெலாந் தாய்தனினுநல்லவட் கன்பனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (கூரு)

புராணம்.

தலைமைசேர்பௌடிக மிலிங்கமார்க்கண்டமெழில் சாரும்வாமனமச்சமே, சைவம்பெறுங்கூர்மம் வரும்வராகங்காந்த சரிதமேபிரமாண்டமும், நிலைமைசேரிப்பத்து முயர்சிவபுராணமா நெடியமால்கதைவைணவம், நீதிசேர்காருட நாரதம்பாகவத நீடியபுராணநான்காம், கலைவளர்சொல்பதுமமொடு பிரமகைவத்தமே கமலாலயன்காதையாம், கதிரவன்காதையே சூரியபுராணமாங் கனல்காதையாக்கினேயம், அலைகொண்டநதியும்வெண் மதியுமறுகும்புனையு மத்தனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (கூசு)

புகழ்ச்சி.

பருகாதவமுதொருவர் பண்ணுதபூஷணம் பாரின்மறையாதநிதியம், பரிதிகண்டலராத நிலவுகண்டுலராத பண்புடையபங்கேருகங், கருகாதபுயல்கலைக ளருகாததிங்கள்வெங் கானிலுறையாதசீயங், கருதரியவிக்குண மனைத்துமுண்டானபேர் காசினியிலருமையாகுந், தெரியவுரைசெய்யின்மொழி கீர்த்திவருகல்வியொடு சீரிதயமிகைவதனம், திடமானவீரமிவை யென்றறிகுவார்களிச செகமெலாங்கொண்டாடவே, அருள்கற்பதருவென்ன வோங்கிடுந்தானதுரை யாகுமெமதருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (கூஎ)

திருமாலவதாரம்.

சோமுகாசுரனைமுன் வதைத்தமர்துயர்கெடச் சுருதிதந்ததுமற்றமாஞ், சுரர்தமக்கமுதீந்த தூர்மையாம்பாய்போற் சுருட்டிமாநிலமெடுத்தே, போமிரணியாக்கதனை யுயிருண்டதேனமாம் பொல்லாதகனகனுயிரைப், போக்கியதுநரசிங்க முலகளந்தோங்கியது புனிதவாமனமூர்த்தியாம், ஏழுறுமிராவணனை வென்றவனிராகவ னிரவிகுலம்வேரறுத்தோன், ஏர்பரசிராமன்வரு கண்ணனெடுபலராமனிப்புவிபயந்தவிர்த்தோர், ஆமினியகற்கியினி மேல்வருவதிவைபத்துமரிவடிவமருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அகூ)

சிவமூர்த்தி.

பிறைசூடியுமைநேசன் விடையூர்திநடமிடும் பெரியனுயர்வது ஐவடிவன், பிச்சாடனன்காம தகனன்மறலியைவென்ற பெம்மான் புரந்தகித்தோன், மரமலிசலந்தரனை மாய்த்தவன்பிரமன்முடி வௌவினோன்வீரேசுரன், மரவுநரசிங்கத்தை வென்றவரனுமைபாகன் வனசரன்கங்காளனே, விறன்மேவுசண்டேசரட்சகன்கடுமாந்தி மிக்க சக்கரமுதவினோன், விநாயகற்கருள்செய்தோன் குகனுமையுடன்கூடி மிளிரேகபாதன்சுகன், அறிவரியதட்சணா மூர்த்தியொடிலிங்கமாமையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதரு சதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௯)

கவிவணக்கம்.

மலரிதழிபைங்குவளை மென்முல்லைமல்லிகை மருக்கொழுந்துயர்கூவிளம், மற்றுமுளவாசமலர் பத்திரஞ்சிலசூடி மணிமுடிதனிற்பொறுத்தே, சிலரொருக்கொடுவனத் துப்பூளைபச்சறுகுசெம்முளரிமலர்சூடவே, சித்தம்வைத்திடவுமங் கீகரித்திடுமகாதேவதேவா தெரிந்தே, கலைவலருணாக்குநன்கவியெசடம்பலவாண கவிராயனாகுமென்புன், கவியையுஞ்சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடனாகுமடனாகமும், அலைபெருகுகங்கையுஞ் செழுமதியமும்புனையு மமலனேயருமைமதவேள், அநுதினமு மனதினினைதருசதுர கிரிவளரறப்பளீசுரதேவனே. (௩)

அறப்பளீசுரசதகம்.

முற்றிற்று.

—(*)—

முற்றிற்று.